பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**02 06 2026** **7 15**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** இந்தியா - மியான்மர் இடையேயான கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்த இந்தியா ஆவலுடன் இருப்பதாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

**2.** கடந்த நிதியாண்டில் 19 லட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு கடல் உணவு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளார்.

**3.** உத்தரப்பிரதேசத்தில் பாலம் இடிந்து விழுந்தது குறித்து விசாரிக்க இரண்டு தனி குழுக்களை அம்மாநில அரசு அமைத்துள்ளது.

**4.** லெபனானின் தெற்குப் பகுதியில் இஸ்ரேல் தாக்குதல் நடத்துவது அமெரிக்கா - ஈரான் இடையேயான சண்டை நிறுத்தத்திற்கு அச்சுறுத்தலாக அமையக்கூடும் என்று ஈரான் எச்சரித்துள்ளது.

**5.** இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 3வது மற்றும் இறுதி மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியா - மியான்மர் இடையேயான கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்த இந்தியா ஆவலுடன் இருப்பதாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

குடியரசுத்தலைவர் மாளிகையில் தம்மை சந்தித்த மியான்மர் அதிபர் திரு. **U Min Aung** உடன் உரையாடியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

இரு நாடுகளும் நூற்றாண்டு கால கலாச்சார நாகரிக உறவுகளை பகிர்ந்துகொள்வதாக அவர் கூறினார்.

இரு நாடுகளுக்கு இடையேயான உறவு, பரஸ்பரம் புரிந்துணர்வு மற்றும் நட்புறவு என்ற வலுவான அடித்தளத்தில் அமைந்துள்ளதாக குடியரசுத்தலைவர் தெரிவித்தார்.

தென்கிழக்கு ஆசியாவிற்கான இந்தியாவின் நுழைவு வாயிலாக மியான்மர் திகழ்கிறது என்று அவர் கூறினார்.

மியான்மர் அதிபராக பொறுப்பேற்றுள்ள திரு. **U Min Aung**-கிற்கு குடியரசுத்தலைவர் வாழ்த்து தெரிவித்தார்.

மியான்மர் அரசுக்கு முன்னுரிமைகள் அடிப்படையில் ஆதரவு அளிக்க இந்தியா தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

மருந்து உற்பத்தி, இயந்திரங்கள், வேளாண் பொருட்கள் போன்ற துறைகளில் இந்தியா - மியான்மர் இடையேயான வர்த்தக உறவு விரிவடைந்துள்ளது தமக்கு மகிழ்ச்சியளிப்பதாகவும் குடியரசுத்தலைவர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

தென்னாப்பிரிக்க சிறு வர்த்தக மேம்பாட்டுத்துறை அமைச்சர் **Stella Tembisa** தலைமையிலான பிரதிநிதிகள் குழு நேற்று மத்திய சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்துறை அமைச்சர் திரு, ஜிதன் ராம் மாஞ்சியை சந்தித்துப் பேசினார்கள்.

புதுதில்லியில் நடைபெற்ற இப்பேச்சுகளின்போது பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி ஆகியவற்றில் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகளைக் கண்டறிவது குறித்து விவாதிக்கப்பட்டது.

நிதி அணுகலை மேம்படுத்துதல், நிறுவனங்களை முறைப்படுத்துவதை ஊக்குவித்தல், டிஜிட்டல்மயமாக்கலை விரைவுபடுத்துதல், சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்துறை மேம்பாட்டில் தொழில்முனைவை வலுப்படுத்துதல் மற்றும் திறன்

மேம்பாடு ஆகியவை குறித்தும் திரு. ஜிதன் ராம் மாஞ்சியுடன் தென்னாப்பிரிக்க பிரதிநிதிகள் விவாதித்தனர்.

<<<<>>>>

இந்திய ரயில்வே கடந்த மாதம் 145 மில்லியன் டன் சரக்குகளை கையாண்டுள்ளதாக ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தைவிட ஒன்று புள்ளி 3 சதவீதம் அதிகம் என்றும் அது கூறியுள்ளது.

இரும்புத்தாது, எஃகு, உரங்கள் ஆகிய சரக்குகள் அதிகளவில் கையாளப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

இதற்கிடையே கடந்த மாதம் 61 கோடி பேர் ரயில்களில் பயணம் செய்துள்ளதாக அமைச்சகம் கூறியுள்ளது.

கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில் 59 கோடி பேர் பயணம செய்ததாக ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஆஸ்திரேலிய துணைப் பிரதமரும், பாதுகாப்பு அமைச்சருமான திரு. **Richard Marles** புதுதில்லியில் வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கரை சந்தித்துப் பேசினார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு. ஜெய்சங்கர், பிராந்திய மேம்பாடு, இந்தோ-பசிபிக் மற்றும் இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து ஆஸ்திரேலிய துணைப் பிரதமருடன் தாம் விவாதித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

உத்தரப்பிரதேசம் ஹமீர்பூர் மாவட்டத்தில் பெட்வா ஆற்றின் மீது கட்டப்பட்டிருக்கொண்டிருந்த பாலம் இடிந்து விழுந்தது குறித்து விசாரிக்க இரண்டு தனி குழுக்களை அம்மாநில அரசு அமைத்துள்ளது.

மாவட்ட நிர்வாகம் மற்றும் உத்தரப்பிரதேச பாலங்கள் கட்டுமான வாரியத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இக்குழுக்கள், 6 பேர் உயிரிழந்த சம்பவம் குறித்து விசாரணையை தொடங்கியுள்ளது.

மாவட்ட நிர்வாகத்தால் அமைக்கப்பட்டுள்ள 3 பேர் கொண்ட குழு, இச்சம்பவம் தொடர்பாக நிர்வாக, தொழில்நுட்ப மற்றும் நடைமுறை அம்சங்களை ஆய்வு செய்து வருவதாக திரு. அபிஷேக் கோயல் தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேச பால கட்டுமான வாரியம் அமைத்துள்ள 3 பேர் கொண்ட மற்றொரு குழு, இடிந்து விழுந்த பாலத்தின் கட்டுமான தரம்,

வடிவமைப்பு, கட்டுமான பொருட்களின் தரம் குறித்து ஆய்வு செய்ய உள்ளதாக ஹமீர்பூர் மாவட்ட ஆட்சியர் கூறியுள்ளார்.

<<<<>>>>

கடந்த நிதியாண்டில் 19 லட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு கடல் உணவு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக கடல் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணைய தலைவர் திரு. ஜவஹர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதன் மதிப்பு 73 ஆயிரத்து 890 கோடி ரூபாய் என்றும், இதுவரை இல்லாத வகையில் அதிக அளவில் கடல் உணவு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

அமெரிக்கா - சீனா ஆகிய நாடுகள் தொடர்ந்து அதிக அளவில் இந்தியாவில் இருந்து கடல் உணவுகளை இறக்குமதி செய்து வருவதாக அவர் தெரிவித்தார்.

இதில் இறால் ஏற்றுமதியின் மூலம் மட்டும் அதிகபட்சமாக 49 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் மேலான வருவாய் ஈட்டப்பட்டுள்ளதாக திரு. ஜவஹர் கூறினார்.

<<<<>>>>

புதுச்சேரியில் பெட்ரோல், டீசல் மற்றும் LPG சிலிண்டர் தட்டுப்பாடு ஏதுமில்லை என்று பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், எரிபொருள் போதுமான அளவு கையிருப்பு உள்ளதாகவும், எந்தவித இடையூறுமின்றி புதுச்சேரியில் அது விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

எனவே நுகர்வோர் பற்றாக்குறை தொடர்பான வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும் அதில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<>>>>

இந்தியா - அமெரிக்கா இடையே இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தில் முதல் தொகுப்பின் பெரும்பாலான அம்சங்கள் இறுதி செய்யப்பட்டுள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தின் முதல் தொகுப்பை இறுதி செய்வது தொடர்பாக அமெரிக்க பிரதிநிதிகள் குழு புதுதில்லியில் இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

இந்தப் பேச்சுகள் இன்று முதல் நாளை மறுநாள் வரை நடைபெற உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சந்தை அணுகல், வரியில்லாத நடவடிக்கைகள், வர்த்தக வசதி, முதலீட்டு ஊக்குவிப்பு உள்ளிட்ட துறைகளில் இடைக்கால ஒப்பந்தத்தின் அம்சங்களை இறுதி செய்வது குறித்து பேச்சுகள் நடைபெறும் என்று திரு. பியூஷ் கோயல் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீர் ரஜோரி மாவட்டத்தில் பயங்கரவாதிகளுக்கு எதிரான கூட்டு தேடுதல் நடவடிக்கை நேற்று 10வது நாளாக தொடர்ந்து நடைபெற்றது.

இதர பாதுகாப்பு அமைப்புடன் இணைந்து ராணுவம் இந்த கூட்டு நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.

அவர்களுடைய மறைவிடங்களைக் கண்டறியவும், அடர்ந்த காட்டுப் பகுதியில் பாதுகாப்பை பலப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பதற்றமான எல்லைப் பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

எல்லைக் கோட்டுப் பகுதியில் உயர் ராணுவ தளபதி ஒருவர் அங்குள்ள பாதுகாப்பு நிலைமை குறித்து ஆய்வு செய்துள்ளார்.

<<<<>>>>

லெபனானின் பெய்ரூட்டின் தெற்கு பகுதியில் தாக்குதல் நடத்த இஸ்ரேல் பிரதமர் உத்தரவிட்டதையடுத்து, அது அமெரிக்கா - ஈரான் இடையேயான சண்டை நிறுத்தத்திற்கு அச்சுறுத்தலாக அமையக்கூடும் என்று ஈரான் எச்சரித்துள்ளது.

இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள ஈரான் வெளியுறவு அமைச்சர் திரு. அப்பாஸ் அராக்சி, லெபனான் உட்பட அனைத்து பகுதிகளிலும் சண்டைநிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அதை மீறுவது அனைத்து ஒப்பந்தத்தையும் மீறுவதாகும் என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லா அமைப்பினரின் தாக்குதலுக்கு பதிலடியாக பெய்ரூட்டில் கடும் தாக்குதல் நடத்தப்படும் என்று இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாகு கூறியிருந்தார்.

<<<<>>>>

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 3வது மற்றும் இறுதி மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

**Taunton-ல் இப்போட்டி இரவு 11 மணிக்கு தொடங்குகிறது.**

மூன்று போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்றுள்ளன.

------------

ஃபிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Arnav Paparkar** - தாய்லாந்தின் **Kunanan Pantaratorn** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஜூனியர் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை **7-6, 6-2** என்ற செட் கணக்கில் பிரிட்டனின் **Mark Ceban** - ரஷ்யாவின் **Kirill Filaretov** இணையை வென்றது.

------------

இந்தோனேஷியா ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டங்களில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் - ஜப்பானின் **Yushi Tanaka**-வையும், மற்றொரு இந்திய வீரர் லக்ஷயா சென் - இந்தோனேஷியாவின் **Alwi Farhan**-ஐயும் எதிர்கொள்கின்றனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் பி.வி. சிந்து - தாய்லாந்தின் **Busanan**-ஐயும், மற்றொரு இந்திய வீராங்கனை மால்விகா பன்சோட் - தாய்லாந்தின் **Pornpawee Chochuwang**-யையும் எதிர்கொள்கின்றனர்.

<<<<>>>>

ஒலிம்பிக் பதக்க இலக்கு திட்டத்தின்கீழ் **22** இந்திய படகு வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இதில் பாரீஸ் ஒலிம்பிக்கில் பங்கேற்ற பல்ராஜ் பன்வார் ஆசிய விளையாட்டு போட்டியில் பதக்கம் வென்ற அரவிந்த் சிங், ஜஸ்விந்தர் சிங் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

**6** பிரிவுகளில் இந்தப் படகு வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

ஆசிய விளையாட்டுப் போட்டி மற்றும் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் உள்ளிட்ட சர்வதேச போட்டிகளில் இந்திய வீரர்கள் பதக்கம் பெற வேண்டும் என்பதை இலக்காக கொண்டு அவர்கள் இத்திட்டத்தின்கீழ் செயல்பட்டு வருவதாக மத்திய விளையாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**<<<<The End>>>>**